நெடுநல்வாடையில் காலநிலை வெளிப்பாடுகள்

திருமதி. பொ. சாந்தி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம், தூத்துக்குடி
DOI: https://doi.org/10.5281/zenodo.19220432

ஆய்வுச்சுருக்கம்

நெடுநல்வாடை, பண்டைய தமிழரின் அக மற்றும் புறவாழ்க்கை முறையை, உணர்ச்சிகரமான கவிதை நயத்துடன் படம் பிடித்துக் காட்டும் மிகமுக்கிய இலக்கிய ஆவணமாகும். அகம் சார்ந்தகாதல் உணர்வுகளையும், புறம் சார்ந்த பாசறை நிகழ்வுகளையும் ஒரே நேரத்தில் சொல்லும் தனித்துவமான நூல். வாடைக்காற்று, பனி, குளிரில் மக்கள் மற்றும் விலங்கினங்கள் படும் துன்பம்,மலர்கள் புத்துக் குலுங்குதல் போன்றவை மிகச் சிறப்பாக வர்ணிக்கப்பட்டுள்ளன. நெடுநல்வாடையில் காலநிலைகள் பல்வேறு விதமாக வெளிப்படுகின்றன. அதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

முன்னுரை

சங்க இலக்கியத் தொகுப்பான பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள நெடுநல்வாடை, நக்கீரரால் பாடப்பட்ட 188 அடிகளைக் கொண்ட அகப்பொருள் மற்றும் புறப்பொருள் கலந்த ஒரு சிறந்த காவியமாகும். பாசறையில் இருக்கும் தலைவனுக்கு நல்லவாடையாகவும், தலைவிக்கு நீண்டவாடையாகவும் அமைந்ததால், இப்பாடல் நெடுநல்வாடை எனப் பெயர் பெற்றது. பாண்டியமன்னன் ஆரியப்படை கடந்தநெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, வாடைக் காலத்தின் குளிரையும், அன்பின் ஆழத்தையும், போர்க்களக் காட்சியையும் தத்ரூபமாகவிவரிக்கிறது

நெடுநல்வாடை

நெடுநல்வாடை (நெடுநல்வாடை) என்பது சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டு நூல்களுள் ஏழாவதாக இடம்பெறும். 188 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பா ஆகும். மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரரால் இயற்றப்பட்ட இது, பாண்டியன் நெடுஞ்செழியனின் போர்ப் பாசறை வாழ்வையும் (நல்வாடை), தலைவனைப் பிரிந்த தலைவியின் குளிர் காலத் துயரத்தையும் (நெடுவாடை) சித்தரிக்கும் நெடுநல்வாடை இப்பெயர் "நெடிய நல்லவாடை" என்பதால் பண்புத் தொகையாயிற்று. தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு நெடிதாகத் தோன்றும் வாடையைக் கூறுவதால் இப்பாடல் பாலைத் திணைக்குரிய உரிப்பொருளை உணர்த்திற்று (பிரிதலும் பிரிதல் நிமித்தமும்). வேற்று நிலத்திற்குப் போய்ப் போரினை வென்ற மன்னனுக்கு இது நல்லதாகிய வாடை ஆயிற்று. இது பாலைக்குப் புறனாகிய வாகைத்திணை ஆகும்.

வாகைதானேபாலையதுபுறனே
(தொல்காப்பியம், புறத்திணையியல் 15).

கார்காலம்

"கார்காலம்" என்பது தமிழர்களின் ஆறு பருவங்களில் முதலாவது பருவமாகும். இது மழைக் காலத்தை குறிக்கும், ஆவணி மற்றும் புரட்டாசி மாதங்களை (ஆகஸ்ட்- செப்டம்பர்) உள்ளடக்கியது. இப்பருவத்தில்மேகங்கள்சூழ்ந்து மழையைப் பொழிந்து, வறண்ட நிலத்தைப் பசுமையாக்குகிறது. வெப்பம் தணிந்து, மழைநீர் வீழ்ச்சிகள் பெருகி, இயற்கை பசுமையாகக் காட்சி அளிக்கும் காலம்.

நெடுவெண் மருதொடுவஞ்சிசாஅய,
விடியல் வந்தபெருநீர்க் காவிரி,

தொடிஅணி முன்கைநீவெய்யோளொடு
(அகம் : 226 9-11)

சங்க இலக்கியங்களில் காதலர்கள் பிரியும் அல்லது இணையும் காலமாகவும்,மழையின் செழிப்பைச் சொல்லும் காலமாகவும் கார்காலம் குறிக்கப்படுகிறது.

கார் காலமகளிர் நிலை

தொடுத்த பெரியமாலை இருக்கவும், குளிர்வாட்டும் கூதிர்ப் பருவத்தில் குளிர்ந்த மலர்களை மாலையளவு சூடிக்கொள்வது நலமாகாது என்பதால், மாலையைச் சூடிக்கொள்வதுவிடுத்து, அதே நிலையில், மகளிர்க்கு மங்கல நலந்தரும் மலர் சூடாதிருப்பதும் முறையாகாதுஎன்பதால், அது கருதி, பிடாவில் தொடுக்கப்படாமல் இருந்தஒருசிலமலர்களைஎடுத்துக்கூந்தலில் சூடிக்கொண்டாள். மனைமாட்சியின் மங்கலமாம் அம்மனைக்குரியாள் மாண்பு கண்டு மனம் குளிர்ந்தார் புலவர்.

"கடியுடைவியன் நகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள் உறழ் நறுங்கல் பலகூட்டுமறுக
வடவர். தந்தவான்கேழ் வட்டம்,
தென்புல மருங்கின் சாந்தொடுதுறப்பக்
கூந்தல் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தல் சின்மலர் பெய்ம்மார்,
தண்நறும் தகரம்முளரி நெருப்பு அமைத்து
இருங்காழ் அகிலொடு வெள்ளயிர் புகைப்ப"

கோவலர் நிலை

மழைபொழிந்து கொண்டிருக்கிறது. கோவலர் தம் ஆநிரைகளை வேறு நிலப்பரப்பில் மேயவிட்டுக்கொண்டு புலம்புகின்றனர். அவர்கள் தலையில் வெண்காந்தள் புவைச் சூடிக்கொண்டுள்ளனர். பனியோடு சேர்ந்து வாடைக் காற்று வீசுகிறது. தம் கைகளைக் கன்னத்தில் வைத்துக்கொண்டு நடுங்கிக் கொண்டிருக்கின்றனர்.

கோவலர் வாடையால் துன்புறுதல்

வையகம் பனிப்ப, வலனேர்புவளைஇப்
பொய்யாவானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலிமுனைஇயகொடுங்கோற் கோவலர்
ஏறுடை இனநிரைவேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடுகலங்கிக் கோடல்
நீடிதழ்க் கண்ணிநீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும் பனிநலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர்கவுள்புடையுஉநடுங்க

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம்

கூதிர்க் காலநிலை

வாடைக்காற்றின் குளிர் தாக்குவதால் பசுக்கள் சரியாக மேயவில்லை. மரத்தில் இருக்கும் மந்திக் குரங்குகள் கூம்பிய நிலையில் அமர்ந்து கொண்டிருக்கின்றன. பறவைகள் பறக்காமல் நிலத்தையே விரும்புகின்றன. கன்றுக்குட்டிகள் கூடக் கறவைமாடுகளில் பால் குடிக்கவில்லை. இப்படிக் கடுமையான வாடைக்காற்று வீசுகிறது. இந்தக் காலத்தில் ஒருநாள் நள்ளிரவு நடக்கும் நிகழ்வினை ஆசிரியர்,

மாமேயல் மறப்பமந்தி கூரப்
பறவைபடிவனவீழக் கறவை
கன்றுகோளொழியக் கடியவீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்
(புறநானூறு 192)

என்ற பாடல் வரிகளின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

ஊரினது செழிப்பு

முசுண்டைக் கொடியில் பொறிப் பொறியாக வெண்ணிறப் புக்கள் புத்துக் கிடக்கின்றன. அதனோடுபுதர் வேலிலியில் பீர்க்கம் பு பொன் நிறத்தில் புத்துக் கிடக்கிறது. ஈர மணலில் இருக்கும் பசுமைநிறக் கால்களை உடைய கொக்கு, சிவந்த கால்களை உடைய நாரை ஆகியவை எளிமையாகக் கவர்ந்துண்ணும்படி கயல் மீன்களை ஆற்றுவெள்ளம் அடித்துவந்தது. பெயல் நின்றதும் வெண்மேகம் படர்ந்து வரும் மூடுபனி. வயலில் விளைந்திருக்கும் நெற்கதிர் வளைந்து தொங்குகிறது. பாக்குமரத்தில் காய்கள்

சதைப் பிடிப்புடன் முற்றித் தொங்குகின்றன. காட்டில் புத்திருக்கும் குளிர்கால மலர்களில் பனித்துளிகள் தூங்குகின்றன.

முழுவலி மாக்கள் தெருக்களில் சுற்றித் திரிதல்

புன்கொடிமு சுண்டைப் பொறிப்புற வான்புப்
பொன்போற் பீரமொடு புதற்புதல் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
இருங்களிபரந்தஈர வெண்மணற்
செவ்வரிநாரையொடெவ்வாயுங் கவரக்
கயலறல் எதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுலந் தெழுந்தபொங்கல் வெண்மழை
அகலிருவிசும்பில் துவலைகற்ப
அங்கண் அகல்வயல் ஆர்பெயற் கலித்த
வண்தோட்டுநெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுறழ் எருத்திற்
கொழுமடல் அவிழ்ந்தகுரூ உக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிளவீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொளமுற்ற
நளிகொள் சிமையவிரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினையகுரூஉத்துளி தூங்க
(அகம் : 86)

முழுவலி மாக்கள் நிலை

உயர்ந்த மாடங்களையுடைய வளப்பமான பழைய ஊரில் உள்ள ஆறு கிடந்தாற்போல் இருந்தஅகன்றநீண்டதெருவில்,தழைகலந்த மாலையை அணிந்த பருமனான அழகான தோள்களையும் இறுக்கமான உடலையும் உடைய வலிமையானஆண்கள்,

மாடமோங்கியமல்லன் மூதூர்
ஆறுகிடந் தன்ன அகனெடுந் தெருவிற்
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்
முடலையாக்கை முழுவலி மாக்கள் வண்டுமூசு
தேறல் மாந்திமகிழ்சிறந்துதுவலைத்
தண்துளிபேணார் பகலிறந்து
இருகோட்டடறுவையர் வேண்டுவயின்
திரிதர (நெடுநல்வாடை : 96)

முறுக்கான உடல் கொண்ட மக்கள். காவல் புரியும் மக்கள். படலைப் பு மாலை தலையில் சூடியவர்கள். குளிரில் முதுகு கூனி முடக்கத்துடன் நடமாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் வண்டுமொய்க்கும் தேறல் பருகியிருக்கிறார்கள். பனித் துவலைகளை அவர்கள் பொருட் படுத்தவில்லை. இரட்டைத் துணியால் போர்த்துக் கொண்டிருக்கின்றனர். பகல் அல்லாத இரவிலும் விரும்பிய இடங்களிலெல்லாம் திரிகின்றனர்.

மாலைக் காலத்தில் பெண்கள் தெய்வத்தை வணங்குதல்

மகளிர். பருத்த மார்பகத் தோள். வள்ளிக்கொடி எழுதப்பட்டதோள். வெள்ளி நிறத்தில் வள்ளிக்கொடி எழுதப்பட்ட தோள். மெத்தென்ற உடம்பு. அழகு. முத்துப் போன்ற புன்னகை. காதுத் தொங்கல் குழையை விரும்பிப் பாய்வது போன்ற நீண்ட கண்கள். மழைபோல் ஈரமான கண்கள். எழிலான கண்கள். இவற்றைக் கொண்டமடவரல் மகளிர். மடப்பத் தன்மை உடையமகளிர். இவர்கள் மாலைப் பொழுது என்று கணித்து அறிந்துகொள்கின்றனர்.

வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோள்
மெத்தென் சாயல் முத்துறழ் முறுவல்
புங்குழைக் கமர்ந்தஏந்தெழில் மழைக்கண்
மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வியரும்பின் பைங்காற் பித்திகத்து
அவ்விதழ விழ்பதங்கமழப் பொழுதறிந்து
இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க் கைதொழுது
மல்லல் ஆவணம் மாலையயர
(அகம் : 136)

பூக்கூடையில் உள்ள பு மலர்வதால் தெரிந்து கொள்கின்றனர். இரும்பால் செய்யப்பட்ட விளக்கில் திரியைத் திரித்துவிட்டு விளக்கு ஏற்றுகின்றனர். நெல்லும் மலரும் தூவி வழிபடுகின்றனர். மாலைக்காலத்தை வழிபடுகின்றனர்.

கார் காலமனையுறைபுறாநிலை

மனை உறைபுறவின் செங் கால் சேவல்
இன்புறு பெடையொடுமன்று தேர்ந்து

உண்ணாது,
இரவும் பகலும் மயங்கி,கையற்று,
மதலைப் பள்ளிமாறுவன இருப்ப
(அகம் : 188)

வீட்டில் வாழும் சிவந்த கால்களையுடைய ஆண் புறாக்கள் தான் இன்புறும் பெண் புறாக்களோடு,பொது இடங்களுக்குச் சென்றுதமது இரையை ஆராய்ந்து எடுத்துஉண்ணாமல் இருந்தன... இரவு எது பகல் எது என்று அறிய முடியாது மயங்கிச் செயலிழந்துகொடுங்கையைத் தாங்கும் பலகையில் நின்றன... ஒரே இடத்தில் நிற்பதால் ஏற்பட்ட கால் வலியைப் போக்கக் காலை மாற்றி மாற்றி வைத்தன

விசிறியும் சாளரமும்

கை வல் கம்மியன் கவின் பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந் தறிச்
சிலம்பிவான் நூல் வலந்தன தூங்க,
வான் உறநிவந்தமேனிலைமருங்கின
வேனில் பள்ளித் தென் வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளைதிரியாது,திண் நிலைப்
போர்வாய்க் கதவம் தாழொடுதுறப்பக்
(நெடுநல்வாடை: 57)

கைத்தொழிலில் வல்லவன் அழகாக உருவாக்கியசிவப்புநிற ஆலவட்டம்(சுருக்கு விசிறி)சுருக்கப்பட்டு,வளைந்தமரத்தறியில் தொங்கியது.அதில்சிலந்திவெள்ளைநூலால் கட்டிய வலை தொங்கியது. வானத்தைத் தீண்டும் உயர்ந்த மேலான இடத்தில் உள்ள வேனிற் காலத்துப் படுக்கை அறைக்குத் தென்றலைக் கொண்டுவரும் திண்மையான நிலையையுடைய நேரான சன்னலின் நன்கு பொருந்திய கதவுகள், காற்று நுழைய முடியாதபடி திறமையாக மூடப்பட்டுத் தாழிட்டுக் கிடந்தன.

முடிவுரை

நெடுநல்வாடை பாடலில் காலநிலை வெளிப்பாடு வெறும் இயற்கை விவரிப்பாக மட்டும் இல்லாமல், மனித உணர்வுகளோடு இணைந்த ஆழமான காட்சியாக அமைகிறது. குளிர்காலத்தின் கடுமை, நீண்ட இரவுகள், காற்றின் தீவிரம் போன்ற இயற்கை மாற்றங்கள், தலைவியின் பிரிவுத் துயரத்தை மேலும் தீவிரப் படுத்துகின்றன. இதன் மூலம் இயற்கையும் மனித வாழ்வும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை என்பதைப் புலவர் நயமாக வெளிப்படுத்துகிறார். எனவே, நெடுநல்வாடையில் கால நிலை வெளிப்பாடு இலக்கிய அழகை மட்டுமின்றி, மனித உணர்வுகளின் ஆழத்தையும் உணர்த்தும் முக்கிய அம்சமாக விளங்குகிறது.

துணைநூற்பட்டியல்

1. சோமசுந்தரனார் பொ. வே: அகநானூறு உரைபாயிரம், 1979, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
2. கோபலையர் தி.வே: தொல்காப்பிய பொருளதிகாரம், நச்சினார்க்கினியம், தமிழ் மண் பதிப்பகம்,சென்னை
3. புலியூர்கேசிகன்: நெடுநெல் வாடை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்